பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

27 02 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு குஜராத் மாநிலத்தில் இன்று முதல் நான்கு நாட்கள் பயணம் மேற்கொள்கிறார்.
2. பெட்ரோலுடன் 20 சதவீதத்திற்கு கூடுதலாக எத்தனாலை கலப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.
3. உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வந்த மகா கும்பமேளா நேற்று இரவுடன் நிறைவடைந்தது.
4. உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி நாளை அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு வருகை தர உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.
5. மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் உத்திரபிரதேச அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<>>>

· குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு குஜராத் மாநிலத்தில் இன்று முதல் நான்கு நாட்கள் பயணம் மேற்கொள்கிறார்.

கெவாடியா மற்றும் கட்ச் மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

அகமதாபாத் மற்றும் காந்திநகரில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவிலும் அவர் கலந்து கொள்கிறார்.

அத்துடன் ஒற்றுமையை சிலையையும் அவர் பார்வையிடவுள்ளார்.

<<<>>>

யோகாவை உலக அளவில் பிரபலப்படுத்துவதில் பிரதமர் திரு நரேந்திரமோடி முக்கிய பங்கு வகித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

மகாசிவராத்திரியையொட்டி கோவை ஈஷா யோகா மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், யோகாவின் பயன்கள் குறித்து எடுத்துரைத்தார்.

மகா சிவராத்திரி விழாவில் பங்கேற்பது சிறப்புமிக்கது என்று திரு அமித்ஷா தெரிவித்தார்.

<<<>>>

பெட்ரோலுடன் 20 சதவீதத்திற்கு கூடுதலாக எத்தனாலை கலப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.,

அஸ்ஸாம் மாநிலம் குவாஹாத்தியில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், பெட்ரோலுடன் ஏற்கனவே 19 புள்ளி ஆறு சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நாட்டில் உள்ள அனைத்து புதைப்படிவ எரிபொருள் உற்பத்தி நிறுவனங்களும் 2045-ஆம் ஆண்டுக்குள் கரியமிலவாயு இல்லாத நிலையை அடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக திரு ஹர்திப் சிங் பூரி தெரிவித்தார்.

<<<>>>

மத்திய பட்ஜெட்டுக்கு பிந்தைய தொழில் துறையினருடனான ஆலோசனைக் கூட்டம் மத்திய கப்பல் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

புதுதில்லியில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில் தொழில்துறை தலைவர்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள கடல்சார் துறை அறிவிப்புகள் குறித்தும் விவாதிக்கவுள்ளனர்.

கடல்சார் உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல், செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவை குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<>>>

இளையோர் கலாச்சார பரிமாற்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியா வந்துள்ள போலந்து பிரதிநிதிகள் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து பேசினர்.

கடந்த 19-ஆம் தேதி இந்திய பயணத்தை தொடங்கிய இந்த பிரதிநிதிகள் இறுதியாக பல்வேறு இடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இப்பிரதிநிதிகள் அகமதாபாத், ஜாம்நகர், போர்ப்பந்தர், கிர், தில்லி உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க கலாச்சார இடங்களை பார்வையிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

விவசாயிகளின் நலன் மற்றும் சுற்றுச்சூழல் கருதியே மத்திய அரசு இயற்கை வேளாண்மைக்காக நாடு தழுவிய அளவில் இயக்கம் ஒன்றை தொடங்க உள்ளதாக குஜராத் ஆளுநர் திரு ஆச்சாரியா தேவ்ரத் கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் ரேவரி மாவட்டத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இத்தகைய முடிவு சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு, விவசாயிகளின் வருவாயையும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

இயற்கை வேளாண்மை முறை நம்முடைய ஆரோக்கியத்திற்கு உகந்ததோடு மட்டுமல்லாமல், மண் வளத்தையும் பாதுகாக்கும் என்று அவர் கூறினார்.

நாட்டில் இயற்கை வேளாண்மையை பின்பற்றும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், திரு அச்சாரியா தேவ்ரத் குறிப்பிட்டார்.

<<<>>>

தெலங்கானாவில் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள எட்டு பேரை மீட்கும் பணி மேலும் விரைவுபடுத்தப்படும் என்று அம்மாநில நீர்பாசனத்துறை அமைச்சர் திரு உத்தம்குமார் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுரங்கப் பாதையில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் உள்ளே முன்னேறியுள்ள நிலையில், சிக்கியுள்ள தொழிலாளர்களை இதுவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று கூறினார்.

சுரங்கப்பாதைக்குள் தண்ணீர் சூழ்ந்தும், உடைந்த இயந்திரப் பாகங்கள் கிடப்பதாலும் மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குழுவினர் தெரிவித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<>>>

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வந்த மகா கும்பமேளா நேற்று இரவுடன் நிறைவடைந்தது.

45 நாட்கள் நடைபெற்ற இந்த ஆன்மீக திருவிழாவில் 66 கோடியே 30 லட்திற்கும் மேற்பட்டவர்கள் புனித நீராடியுள்ளனர்.

நேற்று மட்டும் ஒரு கோடியே 53 லட்சத்திற்கும் மேற்பட்ட யாத்ரிகர்கள் புனித நீராடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குடியரசு தலைவர் திரு திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள், உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் உள்ளிட்டோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

பூட்டான் மன்னர் திரு ஜிப்மே கேசர் உள்ளிட்ட வெளிநாட்டு பிரதிநிதகளும் கும்பமேளாவில் பங்கேற்று புனித நீராடினர்.

நிறைவு நாளான நேற்று கும்பமேளா நடைபெறும் பகுதியில் விமானப்படை விமானம் மூலம் யாத்ரிகர்கள் மீது மலர்கள் தூவப்பட்டன.

இந்த கும்பமேளா வரலாற்றில் மிகப்பெரிய ஆன்மீக திருவிழாவாகவும், மனிதர்கள் பெருமளவில் ஒன்று கூடிய நிகழ்வாகவும் அமைந்தது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

மகா சிவராத்திரியையொட்டி நாடு முழுவதும் சிவாலயங்களில் நள்ளிரவு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.

இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

தமிழகத்தில் தஞ்சை பெரியகோவில், சிதம்பரம் நடராஜர் திருக்கோவில், கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் திருக்கோவில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் உள்ளிட்ட சிவாலயங்களில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நெல்லை மாவட்டம் அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மாள் திருக்கோவிலில் மங்கள இசை, சிவவாத்திய இசை, ஆன்மீக சொற்பொழிவு உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலை தேசிய ஜனநாயகக் கூட்டணி ஐக்கிய ஜனதாதள தலைவரும், முதலமைச்சருமான திரு நிதிஷ்குமார் தலைமையின் கீழ் எதிர்கொள்ளும் என்று பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

மதுபானில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பீகாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைமைத்துவம் குறித்து எந்த குழப்பமும் இல்லை என்று கூறினார்.

<<<>>>

உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி நாளை அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு வருகை தர உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று நடைபெற்ற தமது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய அவர், முக்கிய கனிமங்களுக்கான உரிமையை உக்ரைனுக்கு, அமெரிக்கா வழங்குவது குறித்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரிவித்தார்.

மேலும் உக்ரைன் போர் தொடர்பான ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

ரஷ்யா – உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு டொனால்டு ட்டிரம்ப் குறிப்பிட்டார்.

<<<>>>

அருணாச்சல பிரதேச மாநிலம் இட்டா நகரில் நள்ளரவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் ஐந்தாக பதிவானது.

இதையடுத்து தூங்கிக் கொண்டிருந்தவர்கள் அவசரமாக வீட்டை விட்டு வெளியேறியதாகவும், பெரிய அளவில் சேதம் ஏதும் இல்லை என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் உத்திரபிரதேச அணியை வென்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த உத்திரபிரதேச அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 142 ரன் எடுத்தது.

143 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி 17 ஓவரில் இரண்டு விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

**<<<>>>[]**

தெற்காசிய மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா கோப்பையை வென்றது.

புதுதில்லியில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அந்த அணி 107-32 என்ற புள்ளி கணக்கில் மாலத்தீவை வென்றது.

**<<<>>>[]**

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் பிரியான்ஷூ ரஜாவத், கிரண் ஜார்ஜ், தருண் மாணப்பள்ளி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப்போட்டியில் பிரியான்ஜூ ரஜாவத் 21-14, 21-12 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய வீரரான கிடாம்பி ஸ்ரீகாந்தை வென்றார்.

மகளிர் பிரிவில் ரக்ஷிதா ஸ்ரீ சந்தோஷ், உன்னத்திஹூடா ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா - தனிஷா கிராஸ்டோ இணையும், அஷிதா சூரியா – அம்ருதா பிரமுதேஷ் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<>>>[]**

பெங்களூரு ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரஜூவாத்தேவ் - ஆரியன்ஷா இணையும், சித்தாந்த் பந்தியா – பரிக்ஷித் சோமானி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

***<u>End of News</u>***